**OS.No.336/2018 P.W.1-மஞ்சுளா 31.10.2025**

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

இளங்கோ என்பவர் என் அம்மாவின் அக்கா மகன் என்றால் சரிதான். இளங்கோ என்பவர் 1990 முதல் 1992 வரை பாலமுருகன் புரவிஷ்னல் ஸ்டோர்சை பொறுப்பேற்று நடத்தி வந்தார் என்றால் சரிதான். பாரிஷ்வியூஸ் கன்ஸ்டக்ஷன், மேட்லி ரோட்டில் என் அண்ணன் குணராஜன் வேலை செய்து வந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1992 முதல் இளங்கோ நடத்தி வந்த பாலமுருகன் ஜென்ரல் பிரவிஷனல் ஸ்டோர்ஸ்-யை எனது தந்தை அவரது விருப்பத்தின் பேரில் எனது அண்ணன் குணராஜன் 1992 முதல் 1997 வரை நடத்தி வந்தார் என்றால் இல்லை என் தந்தையின் விருப்பத்தின் பேரில் இளங்கோ என்பவர் தான் 1992 முதல் 1997 வரை நடத்தி வந்தார். எனக்கு பாலமுருகன் ஹார்டுவேர்ஸில் பங்கு இருந்தது என்ற விவரம் தணிக்கையாளர் குறிப்பில் உள்ளது என்றால் இருந்திருக்கலாம், அந்த விவரம் எனக்கு தெரியாது. எனது மகனின் பெயர் அரவிந்த். எனது மகன் அரவிந்திற்கு திருமணம் ஆகிவிட்டது. என் மகன், என் அண்ணன் இளங்கோவின் மகளை தான் திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். என் மருமகளின் பெயர் சுகந்தி அரவிந்த். என் மகளின் பெயர் கிஷாத்தினி. என் தந்தை, எனது மகனுக்கோ அல்லது மகளுக்கோ அல்லது என் மகனின் மனைவி மூலம் பிறந்த குழந்தைகளுக்கோ உயில் பத்திரம் எழுதி வைத்துள்ளாரா என்றால் இல்லை.

(இந்நிலையில் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணைக்காக வாய்தா கேட்டார், தொடர்ந்து பல வாய்தாக்கள் வழங்கப்பட்டு குறுக்கு விசாரணையை முடிக்காததால் இந்நீதிமன்றத்தால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)